eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 6 Special Issue: 02 December 2025
DOI: https://doi.org/10.63300/tm060225

# A Postmodern Dice Game: Centering or Decentering Three Poetesses (Salma, Sukirtharani, Kutti Revathi)

**Dr. Ravi*,**
Head of the Department of Tamil, Faculty of Science and Humanities, SRM Institute of Science and Technology, Vadapalani Campus, Chennai-26.
Email: hod.tam.vdp.sh@srmist.edu.in ORCiD ID: https://orcid.org/0009-0001-0528-8045

**Abstract:**

Postmodernism stands as a rebellious theory, embracing the impossibilities that profoundly shake the foundations of idealists and optimists. The very essence of postmodernism lies in its attempt to dismantle all the arrangements that have kept our society static and undisturbed until now.

The core of this research is to analyze the poetry of Salma, Sukirtharani, and Kutti Revathi, who write with a similar rebellious spirit and mindset, and to situate their works within the framework of postmodern theoretical construction. This study seeks to demonstrate how the subversive and challenging nature of these poets' verses aligns with the central tenets of postmodern thought, particularly in their critique of established social and cultural norms.

**Keywords:** *Postmodernism, Deconstruction, Dalit Feminism, Marginality, Modernism, Grand Narrative, Fragmentation, Minor Narrative, Subversion of the Sacred, Disorder*

**References:**

1. Suresh, M. G. What is Postmodernism? Adaiyalam Pathippagam, n.d.
2. Suresh, M. G. Paul Michel Foucault. Adaiyalam Pathippagam, 2018.
3. Suresh, M. G. Jacques Derrida. Adaiyalam Pathippagam, 2018.
4. Suresh, M. G. Jacques Marie Émile. Adaiyalam Pathippagam, 2018.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**:
I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# மூன்று கவிதாயினிகளை முன்வைத்து அல்லது பின்வைத்து ஒரு பின்நவீனத்துவப் பகடையாட்டம்

## (சல்மா, சுகிர்தராணி, குட்டி ரேவதி)

***முனைவர் இரவி,**
தமிழ்த்துறைத் தலைவர், அறிவியல் மற்றும் கலையியல் புலம்,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், வடபழனி வளாகம், சென்னை-26.

**சுருக்கம் (Abstract)**

பின்நவீனத்துவம் ஒரு கலகக்காரக் கோட்பாடாகும். லட்சியவாதிகளையும், நம்பிக்கைவாதிகளையும் அசைத்துப் பார்க்கும் அசாத்தியங்களைக் கொண்டது. இதுவரை நம் சமூகம் ஆடாமல், அசையாமல் இருந்திடச் செய்த அனைத்து ஏற்பாடுகளையும் கலைத்துப் போட முயல்வதே பின்நவீனத்துவத்தின் சாராம்சமாகும். அதே மாதிரியான கலக மனப்பாங்கோடு எழுதி வருகின்ற சல்மா, சுகிர்தராணி, குட்டி ரேவதி ஆகியோரின் கவிதைகளைப் பின்நவீனத்துவக் கோட்பாட்டுருவாக்கத்துக்குள் பொருத்திப் பார்ப்பதே இவ்வாய்வின் சாரமாகும்.

**திறவுச்சொற்கள்:**

பின்நவீனத்துவம், கட்டுடைப்பு, தலித் பெண்ணியம், விளிம்புநிலை, நவீனத்துவம், பெருங்கதையாடல், சிதைவு, சிறுகதையாடல், புனிதக்கவிழ்ப்பு, பெருங்கதையாடல், ஒழுங்கின்மை.

You are born modern, you do not become so.

Jean Baudrillard

The Death of Postmodernism And Beyond என்ற கட்டுரையில் பின்நவீனத்துவம் இறந்து, புதைந்து விட்டது என்று ஆலன் கிர்பி (Alan Kirby) கூறுகிறார். பின்நவீனத்துவம் இருந்த அந்த இடத்தில் புதிய தொழில்நுட்பங்களும், சமகால சமூக சக்திகளின் அழுத்தத்தின் கீழ் உருவான புதிய அதிகாரமும், அறிவும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன என்று கூறுகின்றார். பின்நவீனத்துவத்தின் நிலை இதுதானா? உண்மையில் பின்நவீனத்துவம் மரித்துவிட்டதா? என்பன போன்ற கேள்விகள் முளைத்துக் கொண்டே இருக்கின்றன.

உலகம் முழுவதும் நீர்த்துப் போன தத்துவச்சாரங்களும், மதமெனும் பெருங்கதையாடலின் பெயரில் நடத்தப்படுகின்ற அரசியல் வேட்டைகளும் அதை உறுதிப்படுத்துவதாய் உள்ளது. தொழில்நுட்பங்களின் கண்மூடித்தனமான வளர்ச்சி காரணமாக ஒற்றைத்துவத்தை நோக்கிப் போக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. பன்மைத்துவங்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைத்து அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பின்நவீனத்துவம் முடிவை எட்டிவிட்டது என ஒரு சிலர் புளகாங்கிதம் அடைந்தாலும், இது பின்நவீனத்துவக் காலந்தான் என்கிற கருத்தும் அழுத்தந்திருத்தமாக முன் வைக்கப்படுகின்றது. அதாவது, சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்கள், இருபத்தோராம் நூற்றாண்டில் தனிமனிதர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சமூக உறவுகள், நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் அபாயங்கள் குறித்து அறிஞர்கள் சிந்திக்க வழிவகுத்துள்ளது.

மேலும், இது பின்நவீனத்துவத்தின் சகாப்தத்தில் நாம் வாழ்கிறோமா என்ற கேள்வியை அறிஞர்களுக்கும் ஏற்படுத்துகிறது. எனவே, சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்தின் நிலையான இயல்பைப்

படம்பிடிக்க பாமன் (Bauman) "திரவ நவீனம் liquid modernity " என்ற சொல்லைக் கொடுக்கிறார். எதுவும் நிலையானதாக இல்லாததால், மக்கள் நகர்கிறார்கள். அவர்களுக்குக் காலப்போக்கில் தன்னைப் புதுப்பித்துக்கொள்வது முக்கிய கவலைகளில் ஒன்றாகிவிட்டது. போமன் கிளாசிக் நவீன யுகத்தைச் சவால் செய்த ஒரு சமூக அமைப்பு என்று பின்நவீனத்துவம் கூறுகிறது.

**பின்நவீனத்துவத்தின் பின்னடைவுச் சாயல்கள்:**

பின்நவீனத்துவ தத்துவம் பொருள் மற்றும் அறிவின் மழுப்பலை வலியுறுத்துகிறது என்ற கருத்து தற்காலத்தில் எழுப்பப்படுகிறது. இது பெரும்பாலும் பின்நவீனத்துவ கலையில் பிரதிநிதித்துவம் மற்றும் முரண்பாடான சுய-விழிப்புணர்வு பற்றிய கவலையாக வெளிப்படுத்தப்படுகிறது . ஆகையால், பின்நவீனத்துவத்தின் பிடிமானங்கள் கொஞ்சம் கொஞ்சம் தளர்ந்துகொண்டே வருவதான பிம்பம் உருவாக்கப்படுகிறது.

மேலும் பின்நவீனத்துவம் முடிந்துவிட்டது என்ற வாதம் ஏற்கனவே தத்துவ ரீதியாக முன்வைக்கப்பட்டது. சில காலமாக நாங்கள் பின்நவீனத்துவக் கருத்துக்களை நம்பியிருந்தோம். ஆனால், இப்போது இல்லை. நாங்களும் இனிப் பின்நவீனத்துவத்தை நம்புவதாக இல்லை. பின்நவீனத்துவமும் இனி எங்களை நம்புவதாக இல்லை. இனிமேல் நாங்கள் விமர்சன யதார்த்தவாதத்தை நம்பப் போகிறோம் என்ற அடிப்படையில் வலியுறுத்துபவர்கள் சிலர் தற்போதைய காலகட்டத்தில் உள்ளனர்.

**பின்நவீனத்துவத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சி:**

பின்நவீனத்துவம் ஒரு குறிப்பிட்ட சிந்தனை முறை இல்லை. அதே போல ஒரு குறிப்பிட்ட இலக்கிய வகைமையும் அன்று. அது எல்லாவற்றையும் கலைத்துப்போடும் ஒரு பொதுப்போக்கு என்று சொல்லலாம். இன்றைய உலகத்தின் இயல்பையும், போக்கையும் ஒட்டு மொத்தமாகப் பின்நவீனத்துவ அம்சம் கொண்டது என்று சொல்கிறார்கள்.

இந்தப் புவிப்பேருலகின் ஆகப்பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்த நவீனத்துவத்தின் மீது ஆழமான அவநம்பிக்கை இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உருவாகி வந்தது. ஒன்று சலித்துப் போன பின்பே அதன்மீது அவாவின்மையும் விலகல் மனநிலையும் உருவாகும். அப்படித்தான் நவீனத்துவத்தின் குறைபாடுகளும், போதாமைகளும், அதன்மீதான நிராசைகளும் வெளிப்படத் தொடங்கின. அதன்பிறகே, உறுதியான அமைப்புகள் மீது ஐயப்பாடுகள் உருவாகியது. திடகாத்திரமான மையம் கொண்ட அமைப்புகள் நிராகரிக்கப்பட்டன. இதுவரை நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருந்த விளிம்பியலாளர்கள் மீதும் புறக்கணிக்கப் பட்டவையின் மீதும் கவனம் குவியத் தொடங்கியது. இவையனைத்துக்கும் இடமுள்ள ஒரு சமூகக் கட்டுமானமும் ஒரு சிந்தனைமுறையும் தேவை என்ற எண்ணவோட்டம் எழுந்தது.

நவீனத்துவம் பகுத்தறிவை முன்னிலைப்படுத்தியது. ஆனால், பின்நவீனத்துவம் பகுத்தறிவைப் பயங்கரம் என்று மறுத்துரைத்தது. தருக்கம் என்பது வன்முறை என்று எடுத்துரைத்தது. ஒழுங்கமைவு, கருத்தொருமிப்பு என்பது அடிமைத்தனத்தின் ஒரு நிலை என்பது போன்ற கருத்துக்களைப் பின்நவீனத்துவம் முன்னிலைப்படுத்தியது. சரி! பின்நவீனத்துவம் எதுபோன்ற கோட்பாட்டை

முன்வைக்கின்றது என்ற கேள்வி எழுந்தபோது,'கோட்பாடு என்ற ஒன்றே இல்லை' என்றது. அதாவது, இதுதான் பின்நவீனத்துவம் என எந்த வரையறைக்குள்ளும் சிக்காததே அதன் தன்மையாகும்.

''பின்நவீனத்துவம் என்பதில் புதுக்கருத்து எதுவும் இல்லை. பெயர்தான் புதியதே ஒழியக் கருத்துக்கள் எல்லாம் பழமையானவைகளாகும். கான்ட், ஹெய்டெக்கர், நீட்சே முதலானோர் முன்வைத்து ஏற்கனவே காலத்தால் நிராகரிக்கப்பட்ட கருத்துமுதல்வாத, இருண்மைவாதப், பகுத்தறிவு எதிர்ப்புக் கண்ணோட்டங்களையே பின்நவீனத்துவம் முன் வைக்கிறது எனவுங் கூறும் கேசவன் (2007) பின்நவீனத்துவம் புதியதாக எந்தக் கருத்தையும் முன் வைக்கவில்லை என நிறுவுகிறார்''1.

**பின்நவீனத்துவம் குறித்து அதிலியங்கிய நிபுணர்களின் கூற்றுகள்:**

ஹேர்பர்ட் மார்க்யூஸ்:

சமூகத்தில் அதிகார மையத்தில் உள்ளவர்களை மட்டும் முன்னிலைப்படுத்தாமல் மற்றமைகளையும் அங்கீகரிக்க வேண்டும். அதாவது, விளிம்பு நிலையினரான பெண்கள், மூன்றாம் பாலினத்தவர், தலித்துக்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள், ஏழ்மை நிலையினர், பழங்குடியினர், அகதிகள் போன்று ஏதேனும் காரணம் கருதிப் புறக்கணிக்கப்பட்டவர்களையும் முன்னிலைப்படுத்திப் பேசுவது பின்நவீனத்துவம் ஆகும்.

ழாக் டெரிடா:

ழாக் டெரிடா பின்நவீனத்துவத்தின் முக்கியமான கோட்பாடாகக் கருதப்பட்ட கட்டுடைப்பு (deconstruction) எனும் கட்டவிழ்ப்பை எடுத்துரைத்தார். ஆகையால், அவர் கட்டவிழ்ப்பு எனும் கோட்பாட்டின் தந்தை என்றே அழைக்கப்படலானார். தத்துவம், இலக்கியம் மற்றும் ஓவியம் என எல்லா தளத்திலும் தனது கட்டவிழ்ப்பு எனும் புதுவகைச் செயல்பாட்டின் மூலம் ஐரோப்பியர்களின் கருத்துக்களை அடித்து நொறுக்கி ஒன்றுமில்லாமல் ஆக்கினார். 'எல்லாவற்றையும் சந்தேகிக்க வேண்டும்; அனைத்தையும் இரண்டாக்க வேண்டும்' என்று காரல் மார்க்ஸ் கூறினார். அதில், 'அனைத்தையும் சந்தேகி என்பதை டெரிடாவும் ஆமோதித்தார். மேலும், இரண்டாம் பட்சமானதையும் வித்தியாசமானதையும் விளிம்புநிலையில் உள்ளதையும் முன்னுக்குக் கொண்டுவா' என்கிற கோட்பாட்டியலை அழுத்தந்திருத்தமாக டெரிடா முன்வைத்தார்.

''1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தெரிதாவுக்கு கேம்பிரிடஜ் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் கொடுப்பதென முடிவு செய்தது. இங்கிலாந்தின் மரபுரீதியான தத்துவாதிகளும் ஆங்கில இலக்கியப் பேராசிரியர்களும் தெரிதாவுக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கக் கூடாது எனப் போர்க் கொடியுயர்த்தினார்கள். தெரிதா முறைப்படியான தத்துவாதியும் இல்லை. இலக்கிய விமர்சகரும் இல்லை என அவர்கள் வாதித்தார்கள். தெரிதா ஒரு அவநம்பிக்கைவாதி எனவும், அர்த்தம், அடையாளம், கருத்தாக்கம், நீதி என அனைத்தையும் மறுப்பவர் எனவும், அவர் ஒரு அராஜகவாதியான கவி எனவும் அவர்கள் வாதிட்டார்கள்''2.

**மிகைல் பூக்கோ:**

உலக வரலாறு என்பது இதுநாள் வரையிலும் தனிமனிதனை முன்னிலைப்படுத்தியோ, மையப்படுத்தியோ உருவாக்கப்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. இத்தகைய தனிமனிதத் துதியாக

உள்ள மையத்தை உடைத்தெறிய முற்படுவதே பின்நவீனத்துவக் கூறுகளில் முதன்மையானது. ஏனெனில் சுயம் என்பது சுயாதீனமானது அன்று, அது மொழி, காலம், சமூகம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றையும் உட்கொண்டதே ஆகும். ஆகவே, அனைத்து அதிகார மையங்களும் கட்டுடைப்புக்கு உள்ளாக வேண்டும். பின்நவீனத்துவம் அதை இலக்கியத்தில் செய்கிறது.

**பின்நவீனத்துவக்கூறுகள்:**

சமூகத்தின் அனைத்துக் கட்டுமானங்களிலும் பின்நவீனத்துவம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிகப் பெரியதாகும். அதில், இலக்கியத்தில் பின்நவீனத்துவம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் அளப்பெரியதாகும். அதாவது, யதார்த்தத்தை உடைத்தல், மையத்தைச் சிதறடித்தல், ஒழுங்கைக் குலைத்தல், வடிவ வரையறை மீறல், எதிர்நிலைகளை முன்னிலையாக்குதல், கேள்விகளால் துளைத்தல், கேலிசெய்தல், ஒற்றைத்தன்மையை விடுத்துப் பன்முகமாய்ப் பார்த்தல், சொற்களால் விளையாடுதல், வாசகனை அதிர்ச்சிக்குள்ளாக்கல், கனவுத்தன்மையோடு எழுதுதல், பேசக் கூடாதனவற்றைப் பேசுதல் என்று அதன் கூறுகள் நீண்டுகொண்டே செல்கின்றது. இவ்வாறாக மேலைநாடுகளில் கருக்கொண்ட இச்சிந்தனைமுறை இன்று பலதரப்பட்ட இலக்கியப் பிரதிகளிலும் மூக்கை நுழைத்து கலவரப் பிரதிகள் தோன்றக் காரணமாகியுள்ளது.

இத்தகைய பின்நவீனத்துவம் தமிழ்ச் சூழலிலும் வந்து சேர்ந்ததில் வியப்பேதுமில்லை. தமிழில் சில படைப்பாளர்கள் பின்நவீனத்துவத்தை உள்வாங்கிக் கொண்டு பிரதிகளைப் படைக்கின்றனர். வேறுசிலர் பின்நவீனத்துவத்தை அறியாமலே தாங்கள் எழுதிய பல படைப்புகளிலும் பின்நவீனத்துவக் கூறுகள் உள்ள பிரதிகள் காணக்கிடைக்கின்றன. அவைகள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். அந்தவகையில், சல்மா, குட்டிரேவதி, சுகிர்தராணி ஆகியோரின் கவிதைகளில் பின்நவீனத்துவத்தின் சாயல்களைக் காண முடிகின்றது.

**சல்மாவின் கவிதைகளில் தட்டுப்படும் பின்நவீனத்துவ சலசலப்புகள்:**

விளிம்புநிலைவாசிகளையும், பெண்களையும் பின்நவீனத்துவம் மிகுந்த கரிசனத்தோடு பார்க்கிறது. தனித்து விடப்பட்ட, பொருட்படுத்தப்படாத புறக்கணிக்கப்பட்ட மனிதர்களின்பால் அக்கறை காட்டப்பட வேண்டும் என்று பின்நவீனத்துவம் எடுத்துரைக்கின்றது.

தற்போது எழுதுகின்ற பெரும்பாலான பெண் கவிஞர்கள், வாசிப்பவனை அதிர்ச்சியிலாழ்த்த வேண்டுமென்பதற்காக பெண்ணுடல் சார்ந்த சொல்லாடல்களைத் தங்களுடைய கவிதைகளில் பயன்படுத்துகின்றனர். அதைத்தாண்டி அவர்களின் பிரதிகளில் ஆழமான எழுத்தாக்கங்கள் ஏதுமில்லை என்கிற ஒரு குற்றச்சாட்டும் உள்ளது. அத்தகைய சாடல்களைச் சாரமற்றுச் செய்யும் வகையில் சல்மாவின் கவிதைகள் உருப்பெற்றுள்ளது.

பெண்ணுடல் மீது காலங்காலமாய் அரங்கேற்றப்பட்டு வரும் வன்முறைகளையும், தாம்பத்தியத்தில் ஏற்படும் உறவுகள் கூட சிலவேளைகளில் தவிர்க்கமுடியாத பாலியல் அத்துமீறலாக நீட்சிகொள்வதையும் சல்மாவின் கவிதைப்பிரதிகள் எடுத்துரைக்கின்றது. இதுபோன்ற கவிதைப்போக்குகள் குடும்பம் என்னும் நிறுவனத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கித் தகர்க்கும் வகையில் அமைகின்றன.

"உன்னை நிறுவிடவியலாத

உன் வருடலில் கிளர்ச்சியுறாத

இவ்வுடலின் மீது

பெரும் விருட்சமெனப் படர்கிறது வன்மம்"3

சல்மாவின் இக்கவிதை ஆணுலகம் பெண்ணுடல் சார்ந்து நிகழ்த்திக் காட்டுகின்ற வன்முறைப்போக்குகளை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய அதிர்ச்சிகரமான கவிதைப் படைப்பூக்கத்திற்குப் பின்நவீனத்துவமே காரணமாகும். பின்நவீனத்துவம் குடும்பமெனும் நிறுவனத்தை வன்முறை நிகழ்த்தும் அமைப்பாகச் சுட்டிக் காட்டுகின்றது. இந்தப் பின்நவீனத்துவத்தின் சாரம் சல்மாவின் மேற்கண்ட வரிகளில் இடம்பெறக் காணலாம் .

பின்நவீனத்துவத்தின் ஓர் அங்கமாகப் பெண்ணியம் திகழ்கின்றது. கருப்புப் பெண்ணியம், வெள்ளைப் பெண்ணியம் எனப் பின்நவீனத்துவம் பல்வேறு பெண்ணியங்களை முன்வைக்கின்றது. ஏனென்றால், ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கக்கூடிய பிரச்சனைகள் வெவ்வேறானதாகும். அந்தவகையில், சல்மா தன் கவிதைப்பிரதிகளில் படைத்துக் காட்டுவது இஸ்லாமியப் பெண்ணியமாகும்

"இன்றும்

என்னை வீழ்த்திக்கொண்டிருப்பது

உன் வலிமையில்லை

உன் பயங்கள்"4

தன்னுடைய பெண்மையை அடக்கியாள்வது ஆணுலகத்தின் பலமில்லை. வலிமை என்ற போர்வையில் அவர்கள் கொண்ட பயமே பெண்ணுலகத்தை நசுக்கியாளக் காரரணமாகும். இதுபோன்ற கவிதைப் பிரதிகளின் மூலம், தன் பகுதிகளில் வாழும் இஸ்லாமியப் பெண்கள் சார்ந்த பெண்ணியத்தையே படம்பிடித்துக் காட்டுகின்றார்.

**சுகிர்தராணியின் கவிதைப்பிரதிகளில் தென்படும் பின்நவீனத்துவப் பாதிப்புகள்:**

புறக்கணிக்கப்பட்ட மனிதர்களாக இருக்கின்ற தலித்துகளைப் பின்நவீனத்துவம் பெரிதும் அரவணைத்துக் கொள்கிறது. தலித்தியமும், தலித் இலக்கியமும் தத்தளித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் பின்நவீனத்துவம் தலித்தியத்தைத் தன்னங்கமாகச் சுவீகரித்துக் கொண்டது. அதன் காரணமாகத் தலித் சிந்தனைகளை உக்கிரத்தோடு எடுத்துரைக்கும் இலக்கியங்கள் பல்கிப் பெருகத் தொடங்கின.

அந்தப் பாய்ச்சலில் தோன்றிய பெரும் விளைச்சலாக சுகிர்தராணியின் கவிதைகளைப் பார்க்கலாம். அவரின் இரவு மிருகம் என்ற கவிதைத்தொகுப்பின் பெயரே ஆணுலகத்தில் அதிர்ச்சிகளை உருவாக்குவதாய் அமைந்திருந்தது. சுகிர்தராணியின் கவிதைகள் பெண்ணியத்தையும் தலித்திய வெளிப்பாட்டினையும் கொண்டிருப்பவையாகத் திகழ்கின்றன.

“மெல்லிய

புலால் நாற்றம் வீசுகின்ற

நானும் தசைகளை முற்றாகப்

பிய்த்தெடுத்த எலும்புகள் தொங்கும்

என் வீடும் கொட்டாங்கச்சியில் தோலைக்கட்டி

பறையொலி பழகும்

விடலைகள் நிறைந்த

என் தெருவும் ஊரின்கடைசியில் இருப்பதாக

நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்

நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்

முதலில் இருப்பதாக “5

எனும் சுகிர்தராணியின் இக்கவிதை தலித்திய முழக்கமாக வெளிப்பட்டுள்ளது. தான் ஓடியாடிய தெருவின் சித்திரத்தையும், மாட்டுக்கறியின் கவிச்சியையும் தன் பிரதியில் மிகக் கூர்மையாக வெளிப்படுத்தியுள்ளார். இதுபோல முன்னெப்போதும் இத்தனை காத்திரமாகத் தலித்திய உணர்வுகள் பெண் எழுதும் கவிதைப்பிரதிகளில் வெளிப்படுத்தப்பட்டதில்லை.

உலகம் முழுவதும் பல்வேறு விதமான பெண்ணியங்கள் இடம்பெற்றிருப்பதாகப் பின்நவீனத்துவம் பறைசாற்றுகின்றது. மேற்கண்ட கவிதைப்பிரதியில் தலித் பெண்ணியக்கூறுகள் ஊடாடுவதாக அறுதியிட்டுக் கூறலாம்.

**குட்டி ரேவதியின் கவிதைப்பிரதிகளில் பின்நவீனத்துவச் சரடுகள்:**

ஏதொன்றையும் அர்த்த ஒழுங்குக்குள் அடக்க முயல்வதே பின்நவீனத்துவக் காலகட்டத்துக்கு முந்தைய நிலையாகும். இதை இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டும்; காலங்காலமாக இது இவ்வாறாகத்தான் புரிந்துகொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்பது போன்ற கட்டுப்பாடுகளைத் தகர்க்க முயல்வதே பின்நவீனத்துவத்தின் சாரமாகும். வரையறுக்கப்பட்ட அர்த்த புலப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட அர்த்த செயல்பாடுகளின் சாத்தியங்களை நோக்கி நகர்வதே பின்நவீனத்துவத்தின் ஆதாரப் போக்காகும்.

குட்டி ரேவதியின் கவிதைகள் அதுமாதிரியான அர்த்த மீறல்களை யாசித்துக் கொண்டே இருக்கின்றது.

’’கதவுகளை ஓசைப்படாது திறந்து

மழை பெய்கிறதாவெனக்

கை நீட்டிப் பார்க்கிறது வெளிச்சம்

தயங்கியபடி’’6

என்ற கவிதையில் மரபுப் பாங்கில் காலங்காலமாகப் புரிந்துகொள்ளப்பட்டு வந்த ஒன்றிலிருந்து வேறொன்றைப் புரிந்துகொள்ள இட்டுச் செல்வதாய் உள்ளது. வெளிச்சமானது தன் கையை நீட்டி மழை பெய்கிறதா எனப் பார்ப்பதாய் எழுதப்பட்டுள்ளது. இது வாசகனை அதிரடிப்பதாய் உள்ளது. இந்தப் பிரதியை இன்ன விதமாகத்தான் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்கிற வரையறைகளை அடித்து நொறுக்குவதாய்க் குட்டி ரேவதியின் கவிதை வரிகள் உள்ளது.

“பூமியெங்கும் பூனை

உடலின் நிற அழகுகள்’’7



Tamilmanam

என்கிற இந்த வரியைப் புரிந்துகொள்வதில் பெரும் சிக்கல் உள்ளது. பூமியின் நிலப்பரப்பு, நீர்ப்பரப்பு இரண்டையும் குறித்துச் சொல்கிறாரா? கவிஞருக்கே உரிய மனப்படமா? என்பதில் ஏராளமான குழப்பங்கள் உள்ளது. இதுதான், இப்படித்தான் அர்த்தம் என்கிற நிலையிலிருந்து மாறுபட்டு வேறோர் அர்த்த சுழலுக்குள் அழைத்துச் செல்வதாய் உள்ளது. சொல்லின் அர்த்தங்களை மறுதலிப்பதால் பின்நவீனத்துவத் தன்மை கொண்ட வரிகளாக இதனைக் கொள்ளலாம்.

“மதில் சுவரென விடைத்து நிற்கும்
இரவு முதுகின் மீதமர்ந்து
கூடலின் பேரொளியைச் சுவீகரிக்கும்
நிலவின் அகன்ற வழியால்”8

இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பதப்பிரயோகங்கள் ஆர்ப்பாட்டானதாக உள்ளது. நாம் இதுவரை புரிந்து கொண்டிருக்கின்ற அர்த்த நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டு நிற்கின்றது. அதன் சொல் வீச்சால் கவிதையின் அர்த்தம் திணறுகிறது.

இரவின் முதுகு என்கிற அந்தச் சொல் உபயோகமே நமக்கு வழக்கத்துக்கு மாறானதாக இருக்கின்ற பொழுது, மதில் சுவரைப் போல விடைத்து நிற்கும் இரவு என்பது இன்னுமொரு சிக்கலான மன உலகத்துக்குள் நம்மை அழைத்துச் செல்வதாக இந்த வார்த்தைப் பயன்பாடு அமைந்துள்ளது. அதற்கடுத்து நிலவின் அகன்ற வழி என்கிற அந்தச் சொல்லாடலும் ஒரு தினுசாக உள்ளது. அதற்கடுத்து, கூடலின் பேரொளியைச் சுவீகரிக்கும் நிலவின் அகன்ற வழி என்கிற அந்த வரியும் இதுவரை நாம் கண்டிராத ஒரு அர்த்த உலகத்துக்குள் நம்மை அழைத்துச் செல்வதாக உள்ளது.

வழக்கமான சொற்பயன்பாட்டு முறையில் சில சொற்களுக்கு இதுதான் பொருள் இதுதான் அர்த்தம் என்கிற ஒரு சூழ்நிலையில் இருக்கும். காலங்காலமாக அந்தச் சொல் ஒரே பொருள் புலப்பாட்டிலேயே உபயோகப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதிலிருந்து மாறி வேறொரு அர்த்த புலப்பாட்டைத் தருவதாக குட்டி ரேவதியின் இந்தக் கவிதை வரிகள் அமைந்துள்ளன. இப்படி வழக்கமான தன்மையிலிருந்து அர்த்தங்களைக் கலைத்துப் போடுகின்ற இந்த முயற்சியை ஒரு பின்நவீனத்துவ மனநிலை என்று கூறலாம்.

**நிறைவுச் சொல்லடைவு:**

பின்னவீனத்துவக் கோட்பாட்டுக் கூறுகள் என்பது உலகம் முழுவதும் அதிர்வலையை வீசி எறிந்து விட்டுத் தற்போது சற்றே ஓய்ந்து இருக்கிறது என்கிற கருத்தியலை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஆனாலும், பின்நவீனத்துவம் சற்றே இந்த உலகமயமாக்கல் சூழலில், நுகர்வு கலாச்சாரச் சூழலில் ஓய்ந்து விட்டதைப் போல காட்சி தந்தாலும் அதனுடைய மிச்ச சொச்சங்கள் இந்தக் காலகட்டத்திலும் இருக்கின்ற விதமாகவே உள்ளது. அதன் தாக்கங்கள் கவிதைகள் உள்ளிட்ட பிரதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தட்டுப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

சல்மாவின் கவிதைகளில் மிக நுட்பமாகப் பெண்ணியக் கோட்பாடுகள் வெளிப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இஸ்லாமிய பெண்களுக்கான சிக்கலை மையப்படுத்தியும் அதற்குள் நிலவுகின்ற பெண்ணியச் சிக்கல்களை வெளிப்படுத்தும் விதமாகவும் அவருடைய கவிதைகள்

வெளிப்பட்டு வருகின்றன. நாம் எடுத்துக்கொண்டுள்ள அந்தக் கவிதையிலும் இஸ்லாமியப் பெண் வாழ்வியல் சூழலில் அந்தப் பெண்களினுடைய நிலை என்னவாக இருக்கின்றது என்பதைக் கூறும் விதமாகவும் அந்த பெண்களின் கோபாவேஷமாகவும் இவருடைய கவிதைகளில் ஆண்களுக்கு எதிரான ஒரு மனோநிலையைக் காண முடிகின்றது.

அந்தவகையில், இந்துப் பெண்ணியம் கிறிஸ்தவப் பெண்ணியம். இஸ்லாமியப் பெண்ணியம் என்கிற ரீதியில் அவருடைய கவிதைகளில் இஸ்லாம் என்னும் பெருங்கதையாடல் பின்புலத்தில் பெண்களினுடைய நிலை என்னவாக இருக்கின்றது; அவர்களினுடைய வாழ்வியல் சிக்கல்கள் எப்படி வெளிப்படுகின்றது என்பதை நுட்பமாக சல்மா பதிவு செய்துள்ளதைக் காண முடிகின்றது. அந்தப் பெருங்கதையாடலைத் தகர்க்கும்வகையில் சல்மாவின் கவிதைகள் உருப்பெற்றுள்ளன.

சுகிர்தராணியின் கவிதைகளில் தலித் பெண்ணிய மனோநிலை நேரடியாக வெளிப்பட காணலாம். வெள்ளைப் பெண்ணியம், கருப்புப் பெண்ணியம் போன்ற பெண்ணியங்களை பின்நவீனத்துவம் உலகளாவிய அளவில் முன் வைத்தாலும் தமிழ்ச் சூழலில் உயர்தட்டுப் பெண்ணியம், அடித்தட்டுப் பெண்ணியம் என்று இரு வகையாக நாம் நம்முடைய சூழலுக்கு தகுந்தாற்போல அதைப் புரிந்து கொள்ளலாம். அந்தவகையில், அடித்தட்டுப் பெண்களினுடைய மனோநிலையைச் சுகிர்தராணியின் கவிதைகள் மிக நுட்பமாக ஒரு பின்நவீனத்துவ மனப்பான்மையோடு வெளிப்படுத்துள்ளதைக் காண முடிகின்றது.

தமிழ்ச்சூழலிலும், மொழிச்சூழலிலும் ஒரு சொல்லுக்கு இன்னவிதமான அர்த்தப்புலப்பாடுகள் மட்டுமே இருக்கின்றன என்பதே பொதுப் புரிதலாகும். அதைத் தாண்டி புதுவிதமான சொற்சேர்மானங்களை உருவாக்கி வாசகனை அதிரடிக்கும் விதமான ஒரு கவித்துவங்களை நோக்கி முயன்றிருக்கின்றார். காலங்காலமாக இருந்து வருகின்ற வார்த்தை பயன்பாட்டு, பொருள் பயன்பாட்டு முறைகளை உடைக்கின்ற இந்த முயற்சியே ஒரு பின்நவீனத்துவ மனநிலை தான் என்று நாம் புரிந்து கொள்ளலாம். எந்த வார்த்தையைக் கொண்டும் என்ன விதமான அர்த்த பாலங்களையும் கட்ட முடியும் என்பதற்கே குட்டி ரேவதியினுடைய கவிதைகள் சாட்சியாக இருக்கின்றன. ஆக, இதுவரை இருந்த அர்த்த கட்டுமானங்களைத் தகர்க்கும் விதமான குட்டி ரேவதியின் கவிதைகளில் பின்நவீனத்துவச் சாயல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இன்றைய பிரதிகள் மட்டுமின்றி நாளைய பிரதிகளிலும் பின்நவீனத்துவம் தன் தாக்கத்தைத் தந்துகொண்டே தான் இருக்கும். தினசரி வழக்கத்தில் ஏதாவதொன்றைப் புறக்கணிக்கும் சிறு செயல்பாட்டு முயற்சியும்கூட, பின்நவீனத்துவமே.

**அடிக்குறிப்புகள்:**

1. பின்நவீனத்துவத்தைக் கட்டுடைத்தல் : அஸ்வத்தாமா – Indian News | SriLankan Tamil News | Articles | inioru.com
2. ழாக் தெரிதா (Jacque Derrida) : மரணத்தின் விளிம்பில் உயிர்த்தல்- யமுனா ராஜேந்திரன் – Indian News | SriLankan Tamil News | Articles | inioru.c
3. பச்சை தேவதை, சல்மா, காலச்சுவடு

4. பச்சை தேவதை, சல்மா, காலச்சுவடு

5. இரவு மிருகம், சுகிர்தராணி, காலச்சுவடு,2004,ப.31

6. பூனையைப் போல் அலையும் வெளிச்சம்,குட்டி ரேவதி,பனிக்குடம் வெளியீடு,2003,ப.64

7. மேலது

8. மேலது

**பயன்பட்ட நூல்கள்:**


1. பின் நவீனத்துவம் என்றால் என்ன?, எம்.ஜி.சுரேஷ், அடையாளம் பதிப்பகம்.

2. பால் மிஷெல் ஃபூக்கோ, சுரேஷ்.எம்.ஜி., அடையாளம், 2018.

3. ழாக் தெரிதா, சுரேஷ்.எம்.ஜி., அடையாளம், 2018.

4. ழாக் மேரி எமில், சுரேஷ்.எம்.ஜி.,அடையாளம், 2018.

**இணையதளம்:**

https://vallinam.com.my/navin/?p=5337


Tamilmanam